මගේ අංකය
எனது இல.
My No.
VV/4/4,7,8,11

ඔබේ අංකය
உமது இல
Your No.

දුරකතනය 2853615
தொலைபேசி 2853777
Telephone 2856261
2856262

# ශ්‍රී ලංකා විවෘත විශ්වවිද්‍යාලය
# இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
# THE OPEN UNIVERSITY OF SRI LANKA

තැපැල් පෙට්ටිය 21
නාවල
නුගේගොඩ

தபால் பெட்டி 21
நாவல,
நுகேகொட

Post Office Box 21
Nawala,
Nugegoda

*தொலைநகல் :* *0112856200*
*மின்னஞ்சல் :* *sarexam@ou.ac.lk*

04 ஜூலை 2023

**<u>19 ஜூலை 2023 03 வது அமர்வு (பி.ப.3.00 - பி.ப. 04.30)</u>**

சங்கைக்குரிய ஐயா,
அன்புள்ள ஐயா/அம்மணி

**<u>பட்டமளிப்பு விழா- 2022(III)</u>**

**ஆசிரியக்கல்வியில் முதுகலைமாணிப்பட்டம்(சர்வதேசம்)/ இரண்டாம்மொழியாக ஆங்கிலம் கற்பித்தலில் முதுகலைமாணிப்பட்டம் / கல்வி முதுமாணிப் பட்டம்/ ஆசிரியக் கல்வியில் முதுமாணிப் பட்டம்/ இரண்டாம்மொழியாக ஆங்கிலம் கற்பித்தலில் முதுமாணிப் பட்டம் / இருமொழிக்கல்வியில் பட்டப்பின் டிப்ளோமா/ விசேடதேவைகள்சார் கல்வியில் பட்டப்பின் டிப்ளோமா / இரண்டாம்மொழியாக ஆங்கிலம் கற்பித்தலில் பட்டப்பின் டிப்ளோமா / இலக்கியம் கற்பித்தலில்(இரண்டாம் மொழிச்சூழமைவில்) பட்டப்பின் டிப்ளோமா / ஆங்கிலத்தில் வாண்மைத்துவநடைமுறைகள் பட்டப்பின் டிப்ளோமா / கல்வி இளமாணி சிறப்புப்பட்டம்(நாடகமும் அரங்கியலும்) / கல்வி இளமாணி சிறப்புப்பட்டம்(இயற்கை விஞ்ஞானங்கள்) / கல்வி இளமாணி சிறப்புப்பட்டம் (விசேடதேவைகள்சார் கல்வி)**

மேற்குறித்த பட்டம்/ முதுமாணிப் பட்டம் என்பன உறுதிசெய்யப்பட்ட பட்டம்பெறுநருக்கான பட்டமளிப்பு விழாவானது **19 ஜூலை 2023 அன்று பி.ப. 3.00** மணிக்கு **பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்** ஆரம்பமாக உள்ளது.

பட்டமளிப்பு வைபவம் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு அனைத்துப் பட்டதாரிகளும் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

1. **19 ஜூலை 2023 அன்று கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திற்கு நுழைகின்ற போது தேசிய அடையாள அட்டை மற்றும் மாணவர் பதிவுப் புத்தகம் ஆகியவற்றினை எடுத்துவருமாறு வேண்டப்படுகிறீர்கள். பட்டதாரி மேலங்கிகளை பெற்றுக்கொள்ளும் போதும் மீளளிக்கும் போதும் தேசிய அடையாள அட்டை மற்றும் மாணவர் பதிவுப் புத்தகம் ஆகியவற்றினை நீங்கள் சமர்ப்பிக்கவேண்டியது கட்டாயமானதாகும்.**

## 2. உங்களது இலக்கம்

பட்டதாரி மேலங்கி / தொப்பி / தோளங்கி போன்றவற்றினை பெற்றுக்கொள்ளல் மற்றும் மீளளித்தல் போன்ற பட்டமளிப்பு வைபவத்துடன் தொடர்புடைய அனைத்து நோக்கங்களிற்கும் சான்றிதழினைப் பெற்றுக்கொள்ளும் போதும் அனுமதி அட்டையுடன் வழங்கப்படும் **மேலே வழங்கப்பட்டுள்ள இலக்கத்தின்** மூலம் நீங்கள் அடையாளப்படுத்தப்படுவீர்கள். **எனவே மேற்குறித்த நிகழ்வுகளின் போது அனுமதி அட்டைகளை உங்களுடன் வைத்திருங்கள்.**

## 3. பட்டதாரி மேலங்கி/ தொப்பி/ தோளங்கி வழங்கல்

கொழும்பு பிராந்திய நிலையத்தில் பதிவுசெய்த பட்டதாரிகளுக்கான பட்டதாரி மேலங்கி/ தொப்பி/ தோளங்கி என்பன இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பரீட்சை பிரிவில் விநியோகிக்கப்படும். பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களில் பதிவுசெய்த பட்டம்பெறுனர்கள் தமது பட்டதாரி மேலங்கி/ தொப்பி/ தோளங்கி என்பவற்றினை உரிய நிலையங்களில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். பதிவுசெய்த நிலையத்தினை விட வேறு எந்தவொரு நிலையத்தில் இருந்தும் பட்டதாரி மேலங்கி/ தொப்பி/ தோளங்கி என்பவற்றினைப் பெற்றுக்கொள்ள எவரும் அனுமதிக்கப்படமாட்டார். பட்டதாரி மேலங்கி/ தொப்பி/ தோளங்கி என்பவற்றினைப் பெற்றுக்கொள்ள வருகைதர முடியாத சந்தர்ப்பம் ஏற்படுமாயின் **பதிவுப் புத்தகம் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட கடிதம் ஒன்றுடன் பெயர் பரிந்துரைக்கப்பட்ட நபர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.**

உங்களது கொடுப்பனவு நிலுவைகள் அனைத்தும் பூரணமாகச் செலுத்தப்பட்டபின்னரே மேற்படி அங்கிகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதைக் கருத்திற் கொள்ளவும்.

பட்டதாரி மேலங்கி / தொப்பி / தோளங்கி விநியோகிக்கப்படும் இடங்கள்

- பரீட்சைகள் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல : 14 ஜுலை 2023 முதல் 17 ஜுலை 2023 வரை( மு.ப. 09.30- பி.ப.3.30.)
- இலங்கை திறந்த பல்கலைக்கழக பிராந்திய / கற்கை நிலையங்கள் : 14 ஜுலை 2023 முதல் 16 ஜுலை 2023 வரை( மு.ப. 09.30- பி.ப.3.30.)

## 4. புகைப்படங்கள்

பட்டமளிப்பில் புகைப்படம் எடுக்கும் பொறுப்பை **Studio Lakdam (Pvt) Ltd, No. 236 Galle Road, Mt. Lavinia** நிறுவனம் மேற்கொள்ளும் என்பதுடன் பட்டம்பெற இருப்போர் புகைப்படத்துடன் இத்தால் இணைக்கப்பட்டுள்ள இணைய இணைப்பை பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

https://shorturl.at/lAEIK

**குறிப்பு:** புகைப்படம் எடுப்பதானது பட்டம்பெறுனர் மற்றும் **Studio Lakdam (Pvt) Ltd** ஆகியோரிற்கு இடையிலான உடன்பாடொன்றே ஆகும் என்பதுடன் இது தொடர்பாக பல்கலைக்கழகம் எவ்வகையிலும் பொறுப்புக்கூறாது.

## 5. பட்டதாரி மேலங்கி / தொப்பி / தோளங்கி மீளளித்தல்

பட்டதாரி மேலங்கி / தொப்பி / தோளங்கி என்பவற்றினை வைபவம் நிறைவுபெற்றதும் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அமைக்கப்பட்டிருக்கும் சேகரிப்பு கரும பீடத்தில் மீளளிக்க முடியும். மாற்றீடாக உங்களது பட்டதாரி மேலங்கி / தொப்பி / தோளங்கி என்பவற்றினை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பரீட்சைப் பிரிவில் 20 ஜுலை 2023 முதல் 22 ஜுலை 2023 வரை மீளளிக்க முடியும். (மு.ப.9.30. முதல் பி.ப.3.30).

22 ஜுலை 2023 இற்கு முன்னர் பல்கலைக்கழகத்திற்கு பட்டதாரி மேலங்கி / தொப்பி / தோளங்கி என்பவற்றினை மீளளிக்க தவறுகின்ற பட்சத்தில் நாளொன்றிற்கு ரூ.500.00 தண்டப்பணம் அறவிடப்படும். பட்டதாரி மேலங்கி/ தொப்பி / தோளங்கியினை தொலைத்தால் அல்லது சேதமேற்படுத்தினால் 25% துறைசார் கட்டணத்துடன் அப்பொருளின் பெறுமதியினை பல்கலைக்கழகம் மீளப்பெற்றுக்கொள்ளும்.

**<u>பட்டதாரி மேலங்கி / தொப்பி / தோளங்கி என்பவற்றினை எந்த ஒரு சூழ்நிலையின் கீழும் எந்த ஒரு பிராந்திய / கற்கை நிலையங்களிலும் மீளளிக்க முடியாது.</u>**

## 6. சான்றிதழ்கள் விநியோகித்தல்

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அமைக்கப்பட்டிருக்கும் சேகரிப்பு கரும பீடத்தில் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறு இல்லாவிடின் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பரீட்சைப் பிரிவில் 20 ஜுலை 2023 ஆம் திகதிக்கு பின்னர் கடமை நாட்களில் பெற்றுக்கொள்ள முடியும். (மு.ப.9.30 முதல் பி.ப 3.30 வரை)

**பட்டதாரி மேலங்கி / தொப்பி / தோளங்கி மீளளிக்கப்படாதுவிடின் உங்களது சான்றிதழ் வழங்கப்பட மாட்டாது** என்பதனை தயதுசெய்து கவனத்தில் கொள்ளவும். இந்த நோக்கத்திற்காக பல்கலைக்கழத்திற்கு வருகைதருகின்ற போது உங்களது தேசிய அடையாள அட்டை மற்றும் மாணவர் பதிவுத் புத்தகம் என்பவற்றினை எடுத்துவரவும். **பட்டம்பெற இருப்பவர்களிடம் மாத்திரம் சான்றிதழ்கள் கையளிக்கப்படும். எனவே உங்களது சான்றிதழ்களை சேகரிப்பதற்காக வேறு யாரேனும் நபரினை அனுப்புவதற்கு எதிர்பார்க்க வேண்டாம்.**

## 7. விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்தல்

இக்கடிதத்துடன் இணைக்கப்பட்ட விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்தல் கட்டாயமானதாகும். மேற்படி பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தைக் கையளிக்க முடியாதவிடத்து உங்களுக்கு மேலங்கி/தொப்பி/ தோளங்கி என்பன வழங்கப்படமாட்டாது என்பதைக் கருத்திற் கொள்க.

## 8. ஒத்திகை மற்றும் பட்டதாரி பவனி

இப் பட்டமளிப்பில் ஒத்திகை நிகழ்வு இடம்பெற மாட்டாது. எனினும் நிகழ்வு உரிய நேரத்தில் நடைபெறுவதனை உறுதிப்படுத்துவதற்காக **பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திற்கு 19 ஜுலை 2023 அன்று பி.ப.2.30** க்கு ஒன்றுகூடுமாறும் பவனிக்காக உங்களுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் இடத்தில் இருக்குமாறும் நீங்கள் அன்புடன் வேண்டப்படுகிறீர்கள். எத்தகைய சூழ்நிலையின் கீழும் உங்களது இலக்கத்தினையோ அல்லது இடத்தினையோ மாற்றுவதற்கு நீங்கள் அனுமதிக்கப்பட மாட்டீர்கள்.

## 9. அனுமதி அட்டை மற்றும் கார் பாஸ்

இந்தக் கடிதத்துடன் பட்டம்பெற இருப்போருக்கு ஒரு அனுமதி அட்டை வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக பட்டப்பின்பட்டம் மற்றும் முதல் பட்டத்தினை பெற இருப்போரின் விருந்தினர்களுக்கு இரண்டு அனுமதி அட்டைகளும் ஒரு கார் பாஸ் உம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திற்கு நுழைவதற்காக வழங்கப்படும். பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் பெற இருக்கும் விருதுபெறுனருக்கு அவர்களுது விருந்தினர்களுக்காக ஒரு அனுமதி அட்டையும் ஒரு கார் பாஸ் உம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திற்கு நுழைவதற்காக வழங்கப்படும்.

எட்டு வயதிற்கு குறைவான பிள்ளைகள் மண்டபத்திற்குள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டர். கையடக்கத் தொலைபேசிகள், கமராக்கள் மற்றும் இலத்திரனியல் சாதனங்களை மண்டபத்திற்குள் எடுத்துவருவது கடுமையான முறையில் தடைசெய்யப்பட்டுள்ளது.

வைபவம் நிறைவுபெறும் வரை மண்டபத்தினை விட்டு வெளியேறாமல் இருக்குமாறு விருந்தினர்கள் வேண்டப்படுகின்றனர். அனைத்து பட்டதாரிகள் மற்றும் அவர்களது விருந்தினர்கள் ஆகியோர் தமது அடையாளங்களை உறுதிப்படுத்தலில் பாதுகாப்பு பணியாளர்களுக்கு ஒத்துழைப்புடன் செயற்படுமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

## 10. புகைப்படங்கள் எடுப்பதனைத் தவிர்த்துக்கொள்ளல்

மண்டபத்தினுள் புகைப்படங்களை எடுத்தலானது கடுமையான முறையில் தடுக்கப்பட்டுள்ளது. மண்டபத்தினுள் புகைப்படக் கருவிகளை எடுத்துவர எவரும் அனுதிக்கப்படமாட்டார்.

**11. ஒழுக்கம்**

வருகைதந்திருக்கும் அனைவரும் அலுவலர் பவனியினைத் தொடர்ந்து இடம்பெறும் வேந்தர் பவனியின் போது எழுந்துநிற்றல் வேண்டும் என்பதுடன் வேந்தர் இருக்கையில் அமரும் வரை நின்றவண்ணம் இருத்தல் வேண்டும். பட்டமளிப்பு நிறைவுபெறும் வரை எவரும் மண்டபத்தினை விட்டு வெளியெறுதல் கூடாது.

பட்டமளிப்பினை நிறைவுசெய்வதற்காக வேந்தர் எழுந்திருக்கும் போதும் அவர் மண்டபத்தினை விட்டு வெளியேறும் வரையில் வருகைதந்திருக்கும் அனைவரும் நின்றவண்ணம் இருத்தல் வேண்டும். வைபவத்தில் வழங்கப்பட்டுள்ள பெயர்ப்பட்டியலுக்கு இணங்க பட்டதாரிகளின் பெயர்கள் வாசிக்கப்படும். (பல்கலைக்கழக இணையத்தளத்தில் பதிவிடப்பட்டுள்ளது). பெயர்கள் வாசிக்கப்படுவதற்கு முன்னர் பட்டதாரிகள் இருக்கைகளில் இருந்து எழுந்து மேடைக்கு செல்லும் படிகளில் வரிசையாக நின்று பட்டதாரி சுருளினைப் பெற்றுக்கொள்ள வேந்தரிடம் பணிவுடன் செல்லுதல் வேண்டும். அவரிற்கு முன்னர் சிரம் தாழ்த்தி வணங்குதல் வேண்டும். பின்பு உரிய இருக்கையில் சென்று அமர்ந்துகொள்ளுதல் வேண்டும்.

**12. உடை**

ஆண் பட்டதாரிகள் தேசிய உடையொன்று அல்லது நீண்ட சூட் (உதாரணம் கழுத்துப்பட்டி மற்றும் கோட்) அணிதல் வேண்டும். பெண் பட்டதாரிகள் பளிச்சிடும் வர்ண உடை அணிவதனை பல்கலைக்கழகம் வரவேற்கிறது. பௌத்த குருமார்கள் தவிர்ந்த அனைத்து பட்டதாரிகளும் பட்ட மேலங்கிகளை அணிதல் வேண்டும். பட்டப்பின் பட்டதாரிகள் மண்ணிற பட்ட மேலங்கிகளை அணிதல் வேண்டும். பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் பெறுவோர் பட்டப்பின் பட்ட மேலங்கியுடன் கறுப்பு நிற பட்ட தோளங்கியினை அணிகின்ற அதே வேளை இளமாணிப்பட்டம் பெறுவோர் தொப்பி ஒன்றுடன் கறுப்பு நிற பட்ட மேலங்கியினை அணிதல் வேண்டும்.

**13. குழுப் புகைப்படம்**

பட்டமளிப்பு முடிவடைந்த பின்னர் உடனடியாக குழுப் புகைப்படம் எடுப்பதற்காக நீங்கள் வருகைதருதல் வேண்டும். புகைப்படம் எடுப்பது குறித்து இங்கு இணைக்கப்பட்டிருக்கும் கடிதத்தினைப் பார்வையிடவும்..

**14. சுகாதார அறிவுறுத்தல்கள்**

தொடரும் கோவிட்-19 தொற்றில் இருந்து பாதுகாத்துக்கொள்வதற்காக சுகாதார அதிகார சபையினால் வெளியிடப்பட்ட ஒழுங்குகளையும் பிரமாணங்களையும் அனைத்துப் பட்டதாரிகளும் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**15. விசேட அறிவுறுத்தல்கள்**

பட்டதாரிகள் மேலே குறிப்பிட்டதிற்கு மேலதிகமாக பட்டமளிப்பு ஆரம்பிப்பதற்கு முன்னர் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு கீழ்ப்படிதல் வேண்டும்.

நன்றி.

உண்மையுள்ள

உதவிப் பதிவாளர்

பரீட்சைகள்

*குறிப்பு *முதல் பட்டம் பெறுனர்களுக்கு மாத்திரம் பட்டதாரி தொப்பி பொருத்தமானதாக அமையும்.*

*** பட்டப்பின் தகைமைச் சான்றிழ்கள் பெறுனர்களுக்கு மாத்திரம் பட்டதாரி தோளங்கிகள் பொருத்தமானதாக அமையும்.*